
➢ அன்னை ஸ்ரீ
சாரதா தேவியிடம்
என் பிரார்த்தனை
➢ முன்னோடும்
பெண்களுக்கு
முன்மாதிரி
அன்னை

## முன்னேறும் பெண்களுக்கு முன்மாதிரி

**அன்னை :-**

இறைவனைத் தாயாக வழிபடுவது என்பது உலக மதங்களுக்கு பாரதம் வழங்கிய ஈடில்லாத பங்களிப்பு: பராசக்தியின் அம்சமாகவும், மனித சமூகத்தின் கலாச்சார ஒருமைப்பாட்டிற்கும் ஒன்றுபட்ட சக்திக்கும் பின்னணியில் விளங்கும் மகாசக்தியாகவும் தாய்மை திகழ்கிறது.

கணவன், குழந்தைகள், முதியோர், நண்பர், வேலைக்காரன் போன்ற ஒருவருக்கொருவர் மாறுபட்ட அனைவரையும் உண்மையான தாய்மை அன்பினால் பிணைக்கிறது.

இதைச் செய்ய ஒரு பெண்மணி நல்ல எண்ணங்கள், கனிவான வார்த்தைகள், அன்பான சேவை, பிரார்த்தனை, நம்பிக்கை, பொறுமை, இறைவனிடம் சரணாகதி ஆகியவற்றைக் கையாள்கிறார்.

சிலர், 'நாங்கள் வெறும் குடும்பப் பெண்கள்தானே. எங்களால் பெரிதாக என்ன சாதிக்க முடியும்?' என அங்கலாய்க்கின்றனர். உண்மையில் எந்தப் பெண்ணும் குடும்பத் தலைவி மட்டுமல்ல; ஒவ்வொரு பெண்ணும் முழு ஆற்றலுமுள்ள மாபெரும் சக்தி ஆவாள்.

**மேலைநாட்டு அனுபவம் :-**

அமெரிக்க முன்னாள் அதிபரின் மனைவி ஹிலாரி கிளிண்டன், 'இந்த நூற்றாண்டின் கடந்த சில

ஆண்டுகளில் பெண்களின் நிலைமையில் முன்னேற்றம் கண்ட நாடுகள் யாவும் முன்னேறியுள்ளன' என்கிறார்.

வன்முறை, அராஜகம், யுத்தம் போன்றவற்றிலிருந்து குடும்பம் என்ற அமைப்பை பாதுகாத்துச் சமுதாயத்தை அழிவிலிருந்து மீட்க வேண்டியதன் அவசரத்தை உணர்ந்த ஐ.நா. சபை 1994-ம் வருடத்தைக் 'குடும்ப நலன் காக்கும் வருடம்' என அறிவித்தது.

அறிவும் அனுபவமும் சேர்ந்த தாய்மையே ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கைக் குறிக்கோளாகும் என்கிறார் அவர். மனைவி என்பவர்கள் சில காலம்வரைதான்; ஆனால் தாய் என்பவள் இறுதிவரை தாயாகவே இருக்கிறாள் என்பது இவரது கருத்து.

## அன்னை ஸ்ரீ சாரதாதேவி :-

ஸ்ரீராமகிருஷ்ணர் சாரதாதேவியைப் பற்றி, அவள் சாரதை, சரஸ்வதி, "அவள் மிக உயர்ந்த ஆன்மிகப் பாதையில் தன் குழந்தைகளுக்கு வழிகாட்ட வந்திருக்கிறாள். அவளே எனது சக்தி...." என்று கூறுகிறார்.

அன்னை சாரதாதேவி, "ஸ்ரீராமகிருஷ்ணர் என் மூலமாக இறைவனின் தாய்மையைப் பிரதிபலிக்கச் செய்தார்" என்கிறார். இன்று பெண்மையின் பழைய கோட்பாடுகளையும் புதிய யுகத்தின் சுதந்திர எண்ணங்களையும் ஒருங்கே கொண்டவராக உலகம் அன்னையை ஏற்றுள்ளது.

## நவீன யுகப் பெண்களின் தனித்தன்மை:-

நாணம், மௌனம், எளிமை போன்ற குணங்கள் உள்ள பெண் மரபோக்கானவள் என்றும் மாறாக, புத்திசாலித்தனமும் சமார்த்தியமும் உள்ளவள் சண்டைக்காரி, செயற்கையானவள், பெண்மையில்லாதவள், அடக்கமற்றவள் எனவும் சமூகம் எடைபோடுகிறது. ஆன்மிகம் என்ற பெயரில் ஏமாற்றும் சிலர் "பெண் எப்போதுமே ஓர் ஆன்மிகத் தடை" என்கின்றனர்.

இவை இரண்டுக்குமிடையே தன் தனித்தன்மை பற்றிய குழப்பத்தில் அவள் ஆண்களின் கைப்பாவையாக, தன்னலக்காரியாக, ஆடம்பரம் மிக்கவளாக பாதுகாப்பற்றவளாக மாறுகிறாள்.

கடந்த காலத்தில் படித்துப் பண்பட்ட பெண்கள் அமைதி, அன்பு, ஒற்றுமை உள்ள குடும்பங்களை உருவாக்குவதில் பொறுப்புடன் இருந்தார்கள். இதனால் சமூகத்தில் மகிழ்ச்சி நிறைந்திருந்தது. அவர்களின் வாரிசுகள் நல்ல குடிமக்களாக வளர்ந்தார்கள்; தாயை வாழும் தெய்வமாகப் போற்றினார்கள். ரிஷிகள் 'மாத்ரு தேவோ பவ' என்று போதித்தார்கள்.

மனைவி என்ற நிலை கனிந்து தாய் என்ற நிலையாக உயர்கிறது. இதனால் பெண் குடும்பத் தலைவியாகிறாள். தன்னடக்கமும் நாணமும் அவளது தாய்மைக்கும் கற்புக்கும் பாதுகாப்பு அரண்களாகின்றன. பழகும் தன்மையும் அமைதியும் அவளுக்குத் தன் குடும்பத்தில் மீதுள்ள அன்பைப் பிரதிபலிக்கின்றன. அவளது நம்பிக்கையும் பிரார்த்தனையும் ஒரு

தனித்தன்மையுள்ள ஆன்மிகச் சக்தியையும் பொறுமையையும் அவளுக்குத் தருகின்றன.

அச்சக்தியால் அவள் தன் குடும்பத்தின் வேறுபட்ட சக்திகளையும் மாறி செல்ல முயல்பவர்களையும் சேர்த்து குடும்பத்தில் அமைதி காக்கிறாள்.

## ஆன்மிக உதவி:-

ஆன்மிகத்தைத் தேடி அவரிடம் அடைக்கலமடைந்த குழந்தைகளுள் நாம் பல மதங்கள், நிறங்கள், ஜாதிகளைச் சார்ந்தவர்களின் பெயர்களைப் பார்க்கிறோம். குருதாஸ் என்ற ஓர் அயல் நாட்டுப் பிரம்மசாரி, சோராப் மோதி என்ற புகழ்பெற்ற பார்சி நடிகர் இவர்களுள் சிலர் ஆவர்.

## ஆன்மிகத்துடன் இணைந்த சமுதாய சேவை:-

தம்மிடம் பொதிந்திருந்த ஆன்மிகச் சக்தியை அவர் இறைவனின் குழந்தைகளின் சேவையிலேயே செலவழித்தார்.

அன்னை தம்மைச் சூழ்ந்திருந்த அனைவருக்கும் பொறுமையுடன் சேவை செய்தார். பல வேலைகளுக்கு நடுவிலும் தொடர்ந்து ஜபமும் பூஜையும் தியானமும் செய்தார். தமது வாழ்வின் மூலம் பெண்ணினுள் இருக்கும் திறமையைத் தட்டி எழுப்பி முழுமையான மனம், உடல், ஆன்மிக வளர்ச்சிக்கு வழிகோலினார்.

ஆன்மிகச் சாதனையிலும் அதன் பலன்களைப் பொழிவதிலும் அன்னை ஸ்ரீராமகிருஷ்ணருக்கு மாறுபாதியாக இருந்து ஈடு கொடுத்தார்; அதன்மூலம் எந்தப்

பெண்ணும் முயற்சியாலும் இறையருளாலும் உயரிய ஆன்மிக நிலைகளை அடைய முடியும் என்பதை நிரூபித்தார். இத்துடன் ஒப்பிடும்போது உலகியல் சாதனைகள் மிகச் சாதாரணமானவை என்பதைத் தெளிவாக்கினார்.

தமது வாழ்வின் மூலம் பெண்கள் தம் குடும்பம், சமூகம், உலகம் ஆகிய மூன்றுக்கும் ஒரே நேரத்தில் பணியாற்ற முடியும் என்பதை அவர் காட்டினார்.

## அன்னையும் பெண்களின் வளர்ச்சியும் :

சமையல், பணிவிடை, மாலை தொடுத்தல், வெற்றிலை மடித்தல், கூடை பின்னுதல் போன்ற பல வீட்டு வேலைகளை அவர் திறமையுடன் செய்தார். அவர் இனிமையான குரலில் பாடுவார். சுயமாகக் கற்பதில் அன்னை அக்கறை காட்டி மகாபாரதம், ராமாயணம் போன்ற நூல்களைப் படித்தார்.

ஆபத்தான சூழ்நிலையிலும் எவ்வாறு தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும் என்பதையும் தூய வாழ்வு வாழ்வதன் மூலம் எவ்வாறு இறைவன் அதற்கான சக்தியைக் கொடுப்பான் என்பதையும் அவர் காட்டினார். தேலோ – பேலா காட்டுப் பகுதியில் கொள்ளையனிடம் சிக்கிய அவர் தனியாகவே தைரியமாகப் பேசி உதவி பெற்றார். தம்மைத் துரத்திய, மனநிலை சரியில்லாத ஹரீஷை அடக்கிப் பின்வாங்கச் செய்தார்.

இவையெல்லாம் 'ஈவ் டீசிங்' செய்பவர்களையும்

அலுவலகங்களில் 'ப்ளாக் - மெயில்' செய்பவர்களையும் சந்திக்க வேண்டிய கட்டாயத்திலுள்ள நவீனப் பெண்களுக்கு படிப்பினைகள் ஆகும்.

## பெண்களுக்கு கல்வி :-

எவ்வொரு பெண்ணுக்கும் தன் குடும்பத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் உள்ளன. அவற்றை அவள் அன்பு குறையாமல் தன்னலமற்ற சேவையின் மூலம் வெளிப்படுத்தினால் அவள் தன் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் சக்தியும் தெம்பும் அளிக்கிறாள்.

அன்னை பொதுநலச் சேவை செய்வதற்காகத் தம் வீட்டை விட்டு வெளியே சென்றதில்லை. அப்படியும் அவரால் சகோதரி நிவேதிதையின் பள்ளி, கௌரிமாவின் பள்ளிகள், ராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த கல்விக் கூடங்கள் ஆகியவை செயல்படுத்தும் முன்னேற்றப் பணிகளுக்கு உதவ, வழி காட்ட முடிந்தது.

தலைவர்களாக வேண்டும் ; அதே சமயம் சேவையும் செய்ய வேண்டும் என எண்ணும் தற்காலப் பெண்கள் பலருக்கு அன்னையின் இந்த லட்சியம் வழிகாட்டும். இதை அவர்கள் தங்கள் வீடுகளிலிருந்தே செயல்படுத்த தொடங்கலாம்.

## அன்னை என்ற மாணவி :-

தமது கணவரின் லட்சியம் பெண்ணாசையை -யும் பொன்னாசையையும் திருந்தி உலகத் தாருக்கு

இறைவழி காட்டுவதுதான் என்பது அன்னைக்கு நன்றாகவே தெரியும். அவர் தாமாகவே முன்வந்து மனைவாழ்க்கையைத் துறந்தார். நவீன யுகத் தம்பதிகளுக்கு அவர் பற்றின்மை, கட்டுப்பாடு, தூய பக்தி ஆகியவற்றின் மூலம் ஆன்மிகத்தில் கணவன், மனைவி இருவராலும் முன்னேற முடியும் என்று காட்டினார்.

## பெண்களின் சுதந்திரம்:-

சுமட்சத்துக்கு இடையிலும் அன்னை கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்ந்தார். நம் நாட்டுப் பெண்கள் தேவைப்பட்டால் சுதந்திரமான ஆனால் கடினமான வாழ்க்கை வாழவும் தயாராக இருக்க வேண்டும். என்பதை அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். கௌரவத்திற்காக அவர்கள் குறிக்கோளை ஒரு போதும் கைவிடக் கூடாது என்கிறார் அன்னை.

அன்னையின் உடை, ஆபரணங்கள் ஆகியவை மிக எளிமையாக இருந்தன. கைகளில் இரு வளையல்களை மட்டுமே அவர் அணிந்திருந்தார். நம் பெண்கள் அன்னையிடமிருந்து எளிய வாழ்க்கையைக் கற்றுக் கொண்டால் ஆன்மிகச் சாதனைகள் பழகுவது மிக எளிது என்று புரிந்து கொள்வார்கள்

## விதவைக் கோலமும் மலடித்தனமும்:

பெண்களின் உலகளாவிய இரு பெரும் பிரச்சனைகளை அன்னை தீர்த்துள்ளார். அவை: விதவைகளின் சோகம், குழந்தை இல்லாதவர்களின் ஏக்கம்.

விதவை என்ற நிலைமையை அடைந்த வேண்டிய ஒரு பரிதாப நிலையாக அன்னை கருதியதே இல்லை. அவர் தம் கணவரின் விருப்பப்படி அவரது மறைவுக்குப் பிறகும் எல்லோருக்கும் ஆன்ம சாதனைகளைப் பழக வழிகாட்டியாக இருந்தார். வெள்ளை உடை அணியவோ, நகைகளைக் கழற்றவோ, பொட்டை அழிக்கவோ, மொட்டை அடிக்கவோ அவர் எண்ணியதில்லை. இம்மௌனப் புரட்சி பல்லாயிரக்கணக்கான விதவைகளுக்கு உதவுகிறது.

அன்னை எல்லோரையும் தாயன்புடன் நேசித்துப் பழகியதால் எல்லோரும் அவரைத் தமது தாயாகவே கண்டனர். அவரும் இடைவிடாது 'தம் குழந்தைகளின்' நலனுக்காகப் பிரார்த்தித்து வந்தார்.

ஆசிரியைகள், சமூக சேவகிகள், மருத்துவர்கள், என்ஜினியர்கள் போன்ற பணிபுரியும் பெண்கள் அன்னையைப் போலத் தம்மைச் சார்ந்தவர்களுக்குத் தெய்வீக அன்புடன் சேவை செய்தால் அவர்களுக்கும் தாம் பெற்றெடுக்காத பிள்ளைகள் பலர் இருப்பதான அனுபவம் ஏற்படுவது உறுதி.

## தடைகளைக் கடந்து செல்லுங்கள்

அன்னை ஆசாரம் பார்ப்பதில் எப்போதுமே கண்டிப்பாக இருந்ததில்லை. தமது மாதவிடாய் நாட்களில் கூட அவர் குருதேவருக்குச் சமையல் செய்வதையோ, ஜபம், பூஜை போன்ற அனுஷ்டானங்களையோ, பக்தர்களுக்குச் சேவை

செய்வதையோ நிஜத்தியதில்லை.

சுத்தமும் அசுத்தமும் மனதளவில்தான். ஒருவரது மனதில் இறைச்சிந்தனை நிறைந்திருந்தால் அவர் தூயவர் என்பதையும் ஸ்ரீராமகிருஷ்ணர் அவருக்குக் கற்றுக் கொடுத்திருந்தார். நம் நாட்டுப் பெண்கள் அன்னையைப் போல இந்த அறிவுரையைப் பின்பற்றினால் பல இக்கட்டான சூழ்நிலைகளிலிருந்து தப்பலாம்.

1886 முதல் 1920 வரை அன்னை பாரதம் முழுவதும் பல தீர்த்த யாத்திரைகளை மேற்கொண்டார். அவருக்கு நாடெங்கிலும் சீடர்கள் இருந்தனர். நாட்டின் அனைத்துக் கலாச்சாரங்களையும் அவர் அறிந்திருந்தார். அனைத்தையும் மதித்தார்.

<u>சந்நியாசினிகளின் தனிச் சிறப்பான அமைப்பு:-</u>

கிறிஸ்தவப் பாதிரிகள் இன்றும் பரப்பி வரும் 'பெண்கள் உயர்ந்த ஆன்மிகச் சாதனைகளைப் பயிலத் தகுதியற்றவர்கள்' என்ற கருத்தை அன்னை தகர்த்தெறிந்துள்ளார்.

உலகில் உள்ள பெண்கள் அனைவரும் ஆனந்தமும் நிறைவும் பெற்று அமர வாழ்வு வாழ அன்னை அருளிய செய்திகளையும் அன்பு மொழிகளையும் பின்பற்ற வேண்டும். உலகையும் உயர்த்தித் தன்னையும் உயர்த்திக் கொள்ள வேண்டும். இதுவே அன்னையிடம் எனது பிரார்த்தனை.